1996 பிப்ரவரி 23]

லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு அது 14 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்படுகிறது. ஆம்பூர் குளிரூட்டும் நிலையத்தினுடைய குளிரூட்டும் திறன் 50,000 லிட்டர் ஆகும். அதனால் புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நில்யம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு கருதுகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தில் பிறந்து ஜகத்தை ஆளும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாளில் தமிழக மக்கள், மகராசியால், சுகவாசியாக இருக்கிறோம் என்று வாழ்த்திக் கொண்டிருக்கிற இந்த நல்ல நாளில், நம் அனைவருடைய வாழ்த்துக்களையும், வாழ்வாங்கு வாழவேண்டும் என்று சொல்கிற எண்ணத்தோடு இணைத்துக் கொண்டு பேரணாம்பட்டு தொகுதியில் மழை நன்றாக தற்போது பெய்திருக்கிறது. உப்பு நீர் நல்ல நீராக மாறியிருக்கிறது. நிறைய பெண்கள் மாடுகள் வளர்ப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆம்பூர் நிறைய தூரம் இருக்கிறது. எனவே, வாய்ப்புவரும் போது பால் உற்பத்தி கூடுமானால் இந்தப் பகுதியிலேயே பால் குளிரூட்டும் நிலையம் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி அதிகரிக்கிற நேரத்திலே நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 111, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

111--

நிதி நிறுவனம் அமைத்தல்

84148--திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கான நிதி நிறுவனம் மத்திய அரசு அமைத்திருப்பதுபோல், மாநில அரசு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1996 பிப்ரவரி 23

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக நிதி நிறுவனம் ஒன்று தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. எனவே. தற்போது புதிதாக நிதி நிறுவனம் அமைக்கின்ற தேவை எதுவும் எழவில்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்காக நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும்போது, பெரும்பான்மையின மக்களும் உடன் வாழ்கின்றனர் என்ற கண்ணோட்டத்தில் பெரும்பான்மை மக்களையும் அரவணைத்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உயரிய இலட்சியத்தின் அடிப்படையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்து செயல்படுத்தி வருவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அனைத்து நிலைகளிலும் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இந்தியா முழுவதும் வலுப்பெற்று வரும் நிலையில், சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்துவதற்கும் தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு நிதி நிறுவனம், வேறு சில மாநிலங்களிலும் செயல்பட்டு வருவதைக் கருத்தில்கொண்டு இப்பொழுதுள்ள கார்ப்பரேஷனில் பின்தங்கியவர்களுக்கு ரூ. 5 லட்சம் வரை கடனுதவி அளிக்கப்படுகின்ற நிலையில் சிறுபான்மையினருக்கு ரூ.1 லட்சம் மட்டுமே கடனுதவி அளிக்கப்படுவதால், சிறுபான்மையினருக்கு உரிய சலுகைகள் முறையாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதாரக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அது 13–7–1994லிலிருந்து செயல்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் மட்டுமே கடனுதவி பெறுவதற்காக இருந்த அந்த மையம் இன்றைக்கு சிறுபான்மையினச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் கடன் பெறுவதற்காக அது அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச்

1996 பிப்ரவரி 23]

சேர்ந்தவர்களாக இல்லாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களும் கடன் பெற்று தொழில் மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு தகுந்த உதவிகளைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் கேட்கும்போது சிறுபான்மையினருக்கு ரூ. 1 லட்சம் வரைதான் கடனுதவி வழங்கப்படுகிறது. ஆனால், பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.5 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தேன். அதுமட்டுமல்லாமல், சிறுபான்மையினருக்காக நிதி நிறுவனம் தனியாகத் துவக்கப்படும்போது மைய மாநில அரசுகளின் நிதியுதவிகளுடன் சிறுபான்மையினர் நலத்தில் அக்கறையுள்ள தன்னார்வ அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்தும் நிதி உதவி பெற்று இப்படிப்பட்ட நிதி நிறுவனங்களைத் துவக்குவதை அடிப்படையாகக் கொள்ளலாம். சிறுபான்மையினருக்கு என்று தனியாக நிதி நிறுவனத்தை துவக்கவேண்டும். தேசிய சிறுபான்மை நிதி நிறுவனம் சார்பில் சென்ற ஆண்டு மௌலானா ஆசாத் எனற கல்விக் கழகத்திற்கு ரூ.25 கோடி வழங்கப்பட்டு இருக்கிறது. குடிசைப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பெண்கள் தங்கிப் படிக்கும் பள்ளிகளுக்கு இந்தக் கல்விக் கழகம் இந்தத் தொகையைப் பயன்படுத்தி வருகிறது. சிறுபான்மையினச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு அரணாக விளங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித அரசு இப்படிப்பட்ட சிறுபான்மையினர் கல்வி பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அந்த அமைப்புகள் தாங்களாகவே நிதியைப் பெற்றுக் கொள்கின்றன. எனவே அவர்கள் அரசை நாட வேண்டும் என்பதில்லை. அவர்களே தேசிய சிறுபான்மை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சிக் கழகம் 1994 ஆம் ஆண்டுதான் அமைக்கப்பட்டது. அதுபோன்று பிற்படுத்தப்பட்டோர் நலக் கழகம்கூட 1992க்குப் பின்னர்தான் அமைத்திருக்கிறார்கள. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1982லிருந்து பிற்படுத்தப்பட்டோர் பொருளாதாரக் கழகம் என்பது செயல்பட்டு வருகிறது. ஆனால் 1982லிருந்து 1991 வரை ரூ.18 லட்சம் மட்டுமே

கடனாக வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு 1991-க்குப் பின்னர் நாம் சுமார் 20,831 நபர்களுக்கு ரூ.1034 லட்சம் ரூபாய் கடனாக வழங்கியிருக்கிறோம். 10 ஆண்டுகளில் அவர்கள் 18 லட்சம் ரூபாய் வழங்கினார்கள். ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இத்துணை உதவிகளை தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நாம் செய்திருக்கிறோம். இதுபோன்று சிறுபான்மை சமுதாயத்தினராக இருந்தாலும் ஒரு லட்சம் ரூபாய் என்பது தனி நபருக்கு வழங்கப்படுகின்ற கடன். எனவே, அவர்கள் கூட்டாக தொழில் செய்வார்களேயானால் அவர்களுக்கு ரூ.5 லட்சம் வரை கடன் வழங்க எந்தத் தடையும் இல்லை. அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். எனவே, எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட நிதி நிறுவனத்தில் வந்திருக்கின்ற மனுக்களின் அடிப்படையில் நாம் பார்த்தோமானால் சிறுபான்மையினர் மிகக் குறைவாக மனுக்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே சிறுபான்மையினர் அதிகம்பேர் அந்த நிறுவனத்தினுடைய உதவிகளைப் பெறவேண்டும். இப்போது இருக்கின்ற நிதி நிறுவனத்திலேயே சிறுபான்மை சமுதாயத்தினர் அதிகம்பேர் நாட்டம் கொண்டு கடன் பெறுவதற்குத் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதிகம்பேர் அந்த நிறுவனத்திலே கடன் பெறுகின்ற முயற்சி செய்தால் நாம் அதற்கு அதிகமாக வழங்க வேண்டும் என்கிற உணர்வு ஏற்படுமானால், அல்லது தேவை ஏற்படுமானால் உறுதியாக புதிய அமைப்புகளை உருவாக்க இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 112, திரு. டி. வேலையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

112--

தெற்கூரில் நடுநிலைப் பள்ளி தொடங்குதல்

***37427--திரு. டி. வேலையா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--